## காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 1 ( 2018 )

( Based on New Official Model Question Paper Pattern )

### மேல்நிலை முதலாம் ஆண்டு

### வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. வியாபாரம் மற்றும் வணிகம் ____ சாம்ராஜ்யத்தில் பொதுவானவையாக இருந்தது.
   அ. பல்லவா ஆ. சோழா இ. பாண்டியா
2. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களில், பண்டமாற்று நிபந்தனைகளுக்கு பொருந்தாது எது?
   அ. தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருத்தல்
   ஆ. உரிமை மாற்றம் தேவையாக இருத்தல் இ. நேரடி தொடர்பு இல்லாமல் இருத்தல்
3. தொழில் செயல்பாடுகளை அளவு, ----------- மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றது.
   அ. உரிமை ஆ. உடமை இ. செயல்பாடுகள்
4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது?
   அ. கூட்டு பங்கு நிறுமம் ஆ. தனியாள்வணிகம் இ. அரசு நிறுமம்
5. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?
   அ. முதளாளி ஆ. கர்த்தா இ. மேலாளர்
6. கீழக்கண்டவற்றுள் எது நாடாளமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
   அ. பட்டய (சாசன) நிறுமம் ஆ. சட்முறை நிறுமம் இ. அரசு நிறுமம்
7. ------- என்பது நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக கையெழுத்தாகும்.
   அ. நிறுமத்தின் பெயர் ஆ. இயக்குநரின் கையொப்பம் இ. பொதுமுத்திரை
8. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர் --------
   அ. ராபர்ட் ஓவென் ஆ. H.C. கால்வெர்ட் இ. டால்மாக்கி
9. ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இயங்கும் நிறுவனங்களை -------- என்று அழைக்கப் படுகின்றது.
   அ. அரசு நிறுவனங்கள் ஆ. பன்னாட்ட்டு நிறுவனங்கள் இ. தனியார் நிறுவனங்கள்
10. பொதுத் துறை நிறுவனத்தின் மிகப் பழமையான அமைப்பு -----------
    அ. பொதுத்துறை நிறுவனம் ஆ. துறைவாரி அமைப்பு இ. சட்முறை நிறுவனம்
11. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, ____ ஆண்டு முதல் தன் பணிகளை தொடங்கியது.
    அ. 1936 ஆ. 1935 இ. 1934
12. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது -------
    அ. கிராம சேமிப்பு ஆ. வணிகச் சேமிப்பு இ. தொழிற்துறை வளர்ச்சி
13. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
    அ. எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ. 5,00,000 இ. 2,00,000
14. தமிழ்நாடு பண்டக காப்பக கழகங்கள் (TNWC) ----------- ஆம் ஆணடு நிறுவப்பட்டது.
    அ. 1959 ஆ. 1969 இ. 1958
15. எந்த பண்டக காப்பகத்தில்,ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய வசதிகள் உள்ளது?
    அ. பொது பண்டக காப்பகம் ஆ. தானியங்கி பண்டக காப்பகம்
    இ. குளிர்பதன பண்டக காப்பகம்
16. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை --------
    அ. உற்பத்தி திறன் ஆ. திறன் இ. செலவு குறைப்பு
17. பின்வருவனவற்றில் எது காப்பீட்டின் பணி அல்ல?
    அ. கடன் நிதி அளிப்பு ஆ. இடர் பகிர்வு இ) மூலதனத்தை திரட்ட உதவி
18. பின் வருவனவற்றில் எவை பொது சரக்கேற்றியின் கீழ் வரும்?
    அ. இரயில்வே ஆ. நகரப் பேருந்து இ. கடல் போக்குவரத்து
19. ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழிற்சாலைக்கு உதாரணம் ---------
    அ. பாலியஸ்ட் ஆ. வண்ணம் தயாரித்தல் இ. கணினி
20. தனியாள் வணிகரின் குறைவான ------------, நிறுவன விரிவாக்கம் செய்ய பெரிதும் பாதிப்பாக உள்ளது
    அ. கல்வி அறிவு ஆ. மேலான்மை திறன் இ. உழைப்பு

பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. கூட்டாண்மை உடன்பாடு எழுத்துவடிவில் இருந்தால் உண்டாகும் நன்மை யாது?
22. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
23. தனியாள் வணிகத்தில் இரகசியத் தன்மை எப்படி காப்பாற்ற இயலும்?
24. கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில் நிறுமத்தின் வகைகளை விவரி.
25. ஒரு பங்கு - ஒரு வாக்கு - குறிப்பு வரைக
26. செலுத்தப்பட்ட மூலதனம் குறைந்தபட்சம் ரூ.5,00,000 கொண்டிருக்க வேண்டிய நிறுமம் எது? அந்த நிறுமத்திற்கு கடனீட்டுப் பத்திரத்திரங்களை வெளியிடத் தடை செய்யப்பட்டுள்ளதா?
27. கூட்டுறவு சங்கத்தில் குறைந்தவரி செலுத்த முடியுமா?
28. ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டில் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் சில பன்னாட்டு நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிடவும்
29. சேவைத் தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?
30. காசோலையின் இடதுபக்க மேல் மூலையில், இரண்டு இணை குறுக்கு கோடுகள் வரைதலைக் குறிக்கும் காசோலை எது? இந்த காசோலைக்கு, வங்கியின் பணம் வழங்கும் மேசையில் பணம் வழங்கப்படுமா?

பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. எந்த வகையில் தொழில் செயல்முறை புறஒப்படைப்பு முக்கியமென நினைக்கிறாய்?
32. போக்குவரத்து - வரையறு
33. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
34. சிறிய நிதி வங்கிகள் என்றால் என்ன?
35. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?
36. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? ( எதேனும் ஆறு )
37. அமைப்பு முறையேடு என்றால் என்ன?
38. சோழர் காலத்திய துறைமுகங்களைக் குறிபிடுக
39. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
40. உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை, தனித் தனியே பயிரிடுவதற்கு பதிலாக, அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம் எது? அதனைப் பற்றி விளக்குக.


B.BALAJI, PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி --- IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> $7 \times 5 = 35$

41. இலாபம் ஈட்டுவதற்கான நோக்கோடு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பொருளாதார நடவடிக்கைளோடும் தொடர்புடையது வணிகம். அத்தகைய வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி

( அல்லது )

பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல் பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி

42. "உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பு" என்று H.கால்வேர்ட் அவர்கள் எதனைக் குறிப்பிடுகிறார்? அதன் கொள்கைகள் என்ன? (ஏதேனும் 4)

( அல்லது )

பொதுத்துறை நிறுவனங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)

43. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளில் ஐந்தினை விரிவாக வகைப்படுத்துக.

( அல்லது )

வணிக வங்கிகளின் பலதரப்பட்ட வங்கி சேவைகளில் " வைப்புகளை ஏற்றல்" பற்றி விளக்குக.

44. எந்த சூழ்நிலையில், நீதிமன்றத்தால் கூட்டாண்மை கலைக்கப் படுகின்றது?

( அல்லது )

போக்குவரத்தின் பல்வேறு வகைகளில் நிலப் போக்குவரத்து பற்றி விளக்குக.

45. கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மக்கள், தங்களுடய நிலைச் சொத்து மற்றும் நடப்புச் சொத்துக்களின் மீது எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், தற்போதைய வெள்ளபாதிப்பினால், தங்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இடர்பாடுகளிலிருந்து குறைந்தளவாவது மீண்டு வந்திருக்க முடியும்? அத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டம் எது? அதன் வகைகளை சுருக்கமாக விளக்குக

( அல்லது )

ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக.

46. வட இந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி

( அல்லது )

தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க

47. வங்கிகள் வாடிக்கையாளர்களின் முகவர்களாகச் செயல்பட்டுச் சில சேவைகளை வழங்குகின்றன.

    1. அத்தகைய சேவையை என்னவென்று அழைக்கப் படுகின்றன?
    2. அவற்றின் செயல்பாடுகளில் நான்கினைக் குறிப்பிடுக.

( அல்லது )

தற்போது அனைத்து வங்கிகளும், வங்கி பரிவர்த்தனைக்கான நேரம் மற்றும் செலவை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன.

1. இந்த கூற்று உண்மையா? மேலும்,
   கீழ் குறித்துள்ள அதன் சேவைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
2. NEFT- தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Fund Transfer)
3. RTGS - உண்மை நேரேத்தத் தீர்வக அமைப்புகள் (Real Time Gross Settlement System)
4. இணைய வங்கியியல் (Internet Banking)
5. கைபேசி வங்கியியல் (Mobail Banking)